[illegible]ERED No. M. 1477

தமிழ் நாடு

ஞாயிற்[illegible] தோறும்
பிரசு[illegible]ரகும்.

சுயராஜ்ய வா[illegible] சுகவாழ்வு.

ஆசிரியர் :—[illegible]லு நாயுடு.

சந்தா விவரம்.
இந்தியா, பர்மா, சிலோன்,

1-வருஷத்திற்கு	4—0—0
6-மாதங்களுக்கு	2—4—0
வெளி நாடு-வருட சந்தா	5—0—0

விளம்பர விகிதம்.

கலம்1-க்கு தடவை 1-க்கு	6—0—0
சில்லரை விளம்பரம் 1-அங்.	0—8—0

நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதவும்.

மலர் 2 ‖ சேலம், (துன்மதி-வருஷம் புரட்டாசி மீ 21 [illegible] (1921-வருஷம் அக்டோபர் மீ 9-உ) ‖ இதழ் 18

மகாத்மா காந்தி யடிகளுக்கு

ஸ்ரீமான் நாமக்கல் வே. ராமலிங்கம் பாடியது.

சாந்தியே உருவாய் வந்த சத்தியமூர்த்தியான
காந்தியே உம்மைக்காணக் கரூர் நகர் வாசியாரும்
காந்தமொன்றணுக ஓடும் ஊசிகள் காட்சிப்போலப்
போந்ததுன் தரிசனத்தால் பொறுமையைக் கற்கவேண்டி

மூவுலகொருங்கே யாண்டு முடிவிலாச் செல்வமெய்தி
ஏவலில் மமதை[illegible]கொண்ட ஹிரணியன் உய்யுமாறு
தாவியத் தூணில் அன்று [illegible]னியுருத்தாங்கி வந்த
சேவகன் மெச்சுகின்ற [illegible]லவேன்யன்ன சீலா

பகைவிறற் கொன்று வென்[illegible] பயப்பட வாழ்ந்து வந்த
வகையிலாச் சாதி போரை [illegible]ழிபடச் செய்ய வேண்டி
மிக மிகத் துன்பமுற்றும் மென்மையால் வென்று கொண்ட
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
இன்பமே நுகராத தேவன் [illegible] என்பாருன்னை

கனவினிற் பிணி மூப்போடுச் சாவினைக்கண்ட பின்னர்
இனியிதன் ரகசியத்தை இன்ன[illegible]றி வோமென்று
கனதன ராஜபோகக் கட்டெலாம் விட்டொழித்த
புனிதன் அப்பௌத்தனென்று போற்றுவாருன்னை யாரும்

அடித்தடி வாழ்க்கை கொண்டு அன்பினை மறந்து நாளும்
கொடியதாம் பணப்பேயாலே குவலயம் அயர்ந்து நொந்து
முடிவிதற் கெங்கே யென்று முறண்படுகின்ற காலை
விடிவது பொழுது போல வீசிய துந்தன் காந்தி

குண்டு பீரங்கியாலும் கோடி யந்திரங்களாலும்
மண்டிய செல்வத்தாலும் மயங்கிடும் பொருள்களாலும்
சண்டைகள் ஜயத்தினாலும் சலிப்பின்றி சுகமெங்கென்று
மண்டல மிருண்ட போது மதி யெனத் தோன்றினாய் நீ

சாந்தமொன்றில்லை யென்றால் சௌக்கியமில்லை யென்று
ஆய்ந்தவர் சொன்னதெல்லாம் அகந்தையால் மறந்து விட்டு
மாந்தினர் கள்ளே யென்ன மயக்க முற்றிருந்தபோது
காந்தியென்றொருவன் தோன்றி காத்தனன் உலகையென்பார்

சத்தியனென்பாருன்னைச் சாந்தமே யென்று சொல்வார்
பித்தனேயாவானென்பார் பேடி யென்றொருசார் சொல்லும்
சித்தனே யென்பாரில்லைத் து[illegible]ராகியென்பாருமுண்டு
இத்தனைப்பெயருந்தாங்கும் இதுவன்றோபெரியார் செய்கை

நம்மையும் புனிதராக்கி நம்மை யாண்டடிமை செய்தார்
தம்மையும் புனிதராக்கித் தரணியில் தருமநீதி
மும்மையும் உயிர்க்குச்சாந்த மூல மந்திரத்தைக் காட்டும்
செம்மை சேர் ராட்டினத்தின் திகிரியைச்சுழற்றி விட்டாய்

உனைவிடப் பெரியாரிந்த உலகினில் இல்லை யென்று
நினைவினிற் பெரியாருன்னை நிரந்தரம் போற்றுகின்றார்
இனிய உன் பெருமை யெல்லாம் இந்திய மாதா பெற்றாள்
அனையவள் பெற்ற கீர்த்தி அடியமும் பெற்றதன்றோ

ஆண்டவன் ஆணை தாங்கி அன்பினை நாட்ட வென்று
பூண்ட உன் கொள்கை யெங்கும் பூமி வேறான்று மட்டும்
நீண்டு உன் ஆயுளோங்க நிமலனுங் கடவுள் மாட்டு
வேண்டுவோம் என்று சொல்லல் வெற்றுரையாகுமன்றோ

[illegible]யாகம்

[illegible]தரிது மானிடராய்ப் பிறத்தலரிது" [illegible]ஔவைப்பிராட்டியார் முன் ஒருசகா[illegible]மணியக் கடவுளுக்கு திருவாய் ம[illegible]ரியவண்ணம் மானிடஜன்மம் எடு[illegible]வும் அருமை. அவ்வாறு மானி[illegible]ம் எடுத்த போதிலும் கூன், குரு[illegible], பேடு முதலானவைகளை நீக்[illegible]ண்டு பிறத்தல், மானிட ஜன்மம் [illegible]விட அருமை. மற்றும் இம்[illegible] [illegible]வருடத்தை யேற் கூறிய அவல[illegible]களை எல்லாம் நீத்துப் பிறந்தாலு[illegible]மும் தவமும் தரித்தலுமரிதே" [illegible] கூறியிருக்கிறாள். ஆ[illegible] [illegible]மனிதனுக்கு தருமகுணம் அல்ல[illegible]த்திவாய்ப்பது மிகவும் அருமை. [illegible] அல்லது தருமம் செய்வதில் [illegible] [illegible]

[illegible] திபாகங்களிலின்றும் [illegible] எய்தும் பலன் என தரும[illegible]களின்றும் அடையும் பயனைக் காட்[illegible]றது. நாம் யாவரும் இந்தியா[illegible]னித்தவர்கள். ஆதலால் இந்நாடு ந[illegible] நாடாகும். நமது அன்னை இந்[illegible], எவ்வாறு நம்முடைய தாயாருக்கு பி[illegible] யாதாயினுமோர் இன்னல் அல்லது அவமானம் விளைந்தால், நம் மனம் சகியாது [illegible]லையோ அல்லது அவமானத்தையோ நீக்க நம்மால் கூடியவரையில் பி[illegible]த்தனம் செய்கிறோமோ, அவ்வாறே நம[illegible] நாட்டிற்கு விளைந்த தீங்கை உட[illegible]பொருளாவி மூன்றையும் தியாகம் செய்[illegible]ம் செய்து, நமது பாரதமாதாவை விடுவிப்பது நம்மில் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

[illegible]பொழுது நமது பாரதமாதாவிற்கு [illegible]ள்ள தீங்குகள் யாவை என்று ஒவ்வொரு [illegible]ாரதப்புதல்வரும் புதல்வியும் அறி[illegible]ம். ஆதலால் அவைகளை இங்கு எடுத்[illegible]ரைக்கவேண்டியது அவசியமில்லை. ஆயின் இப்பொழுது நம் தாய் நாட்டின் குறைகளை எவ்வாறு குறைப்பது என்பதே கேள்வி. அவ்வாறு நம் நாட்டின் குறைகளை[illegible]க்க ஒரே ஒரு வழிதான் நமக்கிருக்[illegible]. அவ்வழியாதெனில் சுயராஜ்ஜிய[illegible]வதே. நாம் சுயராஜ்யம் பெற்று வி[illegible] நமது பாரதமாதாவின் துன்பங்களை [illegible]சூரியனைக்கண்ட பனிபோல் அக[illegible]ம். ஆம் சுயராஜ்யமடைவதெப்ப[illegible]ம் அடைய முக்கியமானவழிக[illegible]னிருக்கின்றன.

[illegible] ஹிந்து முஸ்லீம் ஒற்று[illegible]ம். இது மிகவும் முக்கியமா[illegible] [illegible] ஒற்றுமை இல்லாமற் [illegible] சுயராஜ்யமடைவதெவ்விதம். தற் [illegible] நாம் ஒதுக்கி வைத்திருக்கும் தீ[illegible]ரையும் நம்முடன்சேர்த்துக் [illegible]களுடன் ஒத்துழைக்க வே[illegible] [illegible]க்காரர்கள் "உங்களிலே [illegible] கிடையாது, எங்களை சுயரா[illegible] [illegible] வந்து விட்டீர்களா", என்று

நகைப்பதற்கு இடங்கொடுக்கக்கூடாது. சில ஹிந்து சகோதரர்கள் மலையாளத்தின் குழப்பத்தில் மாப்பிள்ளைமார்கள் சில ஹிந்துக்களை பலாத்காரமாய் தங்கள் மதத்தில் சேர்த்துக் கொண்டனர் என்பதை அறிந்து சிறிது மனத்தளர்ச்சி அடைந்திருக்கக்கூடும். ஆயின் வெறி பிடித்த சில மாப்பிள்ளைமார்கள்தான் அவ்வாறு செய்தார்களே அன்றி மற்றவர்கள் அல்லர். இதனின்றும் இந்து முஸ்லீம் ஒற்றுமையைக் குலைத்துவிடக்கூடாது நண்பர்களே! நமது மகமதியத் தலைவர்களாகிய அசத் சுபானி, யாகூப்ஹுசேன் முதலானவர்கள் மாப்பிள்ளைமார்களின் சார்பாக கேட்டுக்கொண்டிருக்கும் மன்னிப்பை அறிந்து நம்மைக்கண்டு பிறர் நகையா வண்ணம் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையை பலப்படுத்தி கிற்பீர்களாக!

இரண்டாவதாக, நாம் தற்பொழுது இறங்கியுள்ள சுயராஜ்யப் போரை ஜெயிக்கவே [illegible] [illegible]

[illegible] [illegible] இந்தியாவினின்றும் மேலை[illegible]ட்டிற்குச் செல்லும் 65 கோடி ரூபாய்க[illegible] சுதேசித்துணி அணிவதால் 1 வருஷத்தில் தங்கும். இந்தியாவிலுள்ள 32 கோடி ஜனங்களில் தலை 1-க்கு சராசரி 2 ரூபாய் மீதியாகிறது. நம் நாட்டில் ஆங்கிலேயர்கள் திருவடிகள் வைக்காமுன்னர் நம் நாட்டின் நெசவுத்தொழில் சொல்லத்தரமல்ல. அக்காலத்தில் நம் சகோதரர்கள் செய்துவந்த டெக்கா மஸ்லினுக்குச் சமானமுடையத் துணிகள் தற்காலத்தில் கிடையாதென்று சொல்லலாம். ஓர் ஆசிரியர் முற்காலத்தில் நம் நாட்டின் நெசவுத் தொழிலைக்குறித்து எழுதுகிறார். முற்காலத்தில் அரசாண்ட மொகலாயச் சக்ரவர்த்தியாகிய ஔரங்கசீப்பின் மகள் டெக்காவில் நெய்த புடவைகள் 7 கட்டின போதிலும் அவளுடைய அங்கங்கள் வெளியில் தெரியுமென்றும், ஓர் டெக்கா பெரிய மஸ்லினை மோதிரத்தின் பாருள் செய்து போட்டுக் கொள்ளலாமென்றால் என்னே நம் புராதன நெசவின் அருமை! மேற் கூறியவாறு நடந்து வந்த நெசவுத் தொழிலை ஆங்கிலேயர்கள் நம்மவர்களின் கட்டை விரல்களை அறுத்து நெசவுத் தொழிலை தலை காட்ட வொட்டாமல் செய்து விட்டனர். நாம் எப்பொழுதும் மான்செஸ்டர் முதலான அயல்நாடுகளினின்றும் நம் துணிகளை எதிர் பார்க்க முடியாது. தட்டென்று அவர்கள் துணிகளை அனுப்புவதை நிறுத்தி விட்டால் நம் நிலைமை என்ன? யோசியுங்கள்! ஆதலால் நாம் எப்பொழுதும் ஒருவரிடமிருந்து இன்றியமையாத வஸ்துக்களை எதிர் பார்க்க முடியாது. நம் மானத்தை பிறர் மூடுவதா? என்பதை ஒவ்வொரு மனிதனும் நினைப்பானேயாகில் உடனே அவன் சுதேசியத்தைக் கைக்கொள்வானென்பது திண்ணம். [illegible] தேசியமே சுயராஜ்ஜிய சித்திக்கு முக்கியமானது என்பதை அறிந்து ஒவ்வொருவரும் பரதேசி உடைகளை பகிஷ்கரித்து சுதேசி[illegible]த்தைக்கைக்கொண்டு சுயராஜ்யத்தை அடைய உழைக்கவேண்டும்.

[2-ம் பக்கம் பார்க்கவும்]

தடுக்கப்பட்ட ஓர் அக்கிராசன உரை.

—:o:—

சென்ற 2-ம் தேதி எடப்பாடியில் கூட விருந்ததும், 144-வது பிரிவின்படி தடுக்கப்பட்டதுமான முதலாவது திருச்செங்கோடு தாலூக்கா மகாநாட்டின் அக்கிராசனாதிபதியாக தெரிந்தெடுக்கப்பட்ட ஸ்ரீ ஈ. வி. ராமசாமி நாயக்கர் அச்சமயம் செய்திருக்க வேண்டிய உபந்நியாசத்தின் சாராம்சம் பின் வருமாறு:—

சகோதரிகளே, சகோதரர்களே!

எடப்பாடியில் கூடும் திருச்சங்கோடு தாலூக்கா முதலாவது மகா நாட்டுக்கு அக்கிராசனம் வகிக்கும் பாக்யம் நீங்கள் எனக்கு அளித்ததை நான் சிரமப்படி வந்தனத்துடன் ஏற்றுக்கொள்ளவேண்டியது என்னுடைய முதற்கடமை. ஆயினும் அதை ஏற்றுக்கொள்ளுமுன், அப்படி ஏற்றுக்கொள்வதில் எனக்குள்ள குறைகளையும் கஷ்டங்களையும் உங்களுக்குத் தெரிவித்து அதனால் ஏற்படக்கூடிய குற்றங்களை மன்னிக்கும்படி வணக்கத்துடன் கேட்டுக்கொண்டு, உங்களுடைய வாக்குறுதியின் பேரிலேயே இந்த ஸ்தானத்தை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்.

'ஏனெனில் இந்த பொருப்பேற்ற ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டு நிர்வகிக்கும் திறமை எனக்கு இல்லையென்பதை நான் நன்றாய் அறிவேன். அதற்கு நான் பாத்திரனல்ல என்பதையும் உணர்வேன். ஆனால் இந்த எடப்பாடி மகாஜனங்களிடத்தில் எனக்கு உள்ள அன்பும் மதிப்பும், இதை ஏற்றுக்கொள்ளும்படி கட்டாயப்படுத்தியதுடன் தென்னாட்டு தலைவர்களில் பிரகாசம் பெற்று விளங்கும் எனது நண்பர் ஸ்ரீமான் டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்கள் இந்த மகாநாட்டு தலைமை ஸ்தானத்தை ஏற்றுக் கொள்ளும்படி இட்ட கட்டளையை மறுக்க முடியாத காரணத்தாலும், இன்னும் அநேக[ர்] இக்கு விஜயம் செய்து எனக்கு உதவி அளிப்பார்கள் என்கிற உறுதியின் பேரிலும் நான் இந்த பொறுப்புள்ள பதவியை ஒப்புக்கொண்டேன்.

அன்றியும், இப்போது மகாநாடுகளின் தலைமை வகிப்பதற்கு முன் காலங்களைப் போல வாக்கு சாதுரியமும் விவகார ஞானமும் பேச்சு வன்மையும் தேவையில்லை என்பதும், ஒற்றுமை, தியாகம், பலாத்காரமின்மை, என்பவைகள்தான் தேவையென்பதுமே இந்த மகாநாட்டு தலைமை ஸ்தானத்தை ஒப்புக்கொள்ள என்னை தைரியப்படுத்தியது.

தற்கால நிலைமை.

நம் இந்திய தேசமானது சுவல்ப நூற்றாண்டுகளுக்கு முன் இந்தியர்களாலேயே ஆளப்பட்டு வந்தது. இந்திய வளம் நாளுக்

[முதல் பக்கம் தொடர்ச்சி]

கடைசியாய் கள், சாராயம் முதலான லாகிரி வஸ்துக்களை பலாத்காரமற்ற வழிகளில் தடை செய்தலே. காலையிலே எழுந்து காப்பி குடிக்கும் வழக்கத்தையும் தேயிலை பானம் முதலானவைகளையும் ஒழியுங்கள்! தேச நன்மையை நாடுங்கள்! நமது தலைவர்களும் சத்தியாக்ரகிகளும், சாந்தஸ்வரூபிகளும், இந்தியாவின் முன்னேற்றத்தையே நினைவிலும் கருதுபவர்களும், அடக்குமுறைகளுக்குமஞ்சாத வீரதீரபுருஷரத்னங்களாகிய மகாத்மா காந்தி, அலிசகோதரர்கள் லஜபதி, தேசபந்துதாஸ் முதலானவர்கள் சுயராஜ்ய இயக்கத்தில் வெற்றி பெற்று, நம் இந்தியாவில் சுயராஜ்யக்கொடியை நாட்டி, பாரதமாதாவை விடுவிக்க எல்லாம் வல்ல பரம்பொருள் அருள் புரிவாராக!

பாரதப்புதல்வர்களே! விதேசியத்தை விலக்குங்கள்! சுதேசியத்துணிகளை உடம்பில் சுற்றுங்கள்! மதுபானத்தை விடுங்கள்! இந்துமுஸ்லீம் ஒற்றுமையை பலப்படுத்துங்கள்! தேச நன்மையைத்தேடுங்கள்! பாரதமாதாவை பக்திசெய்யுங்கள்! சுயராஜ்யத்தை சீக்கிரம் அடைவோமாக!

கே. எஸ். நஞ்சுண்டையர்

குதான் பெருமை சுதந்தரம், மதம், [illegible] கல்வி, ஆண்மை, வீரம், பரோபகாரம், நீதி, கைத்தொழில், செல்வம், இவைகளில் உலகத்தில் சிறந்த நாடாய் இருந்துவந்தது. பொருப்பற்ற அன்னியர் படையெடுப்பிலும் தந்திரத்தினாலும் இந்தியா அன்னியர் கைப்பட்டு, இவை அனைத்தும் ஒருங்கே குறைவுபட்டு, உலகத்தார் பார்த்து[...]ம் செய்து சிரிக்கத்தகுந்த அளவுக்கு அடிமைகளாகி தினே தினே கீழ்நோக்கிச்சென்றுகொண்டேயிருக்கிறோம், என்பதை உணராதார் இல்லை. ஆனால் இவற்றை சீர்திருத்தம் செய்வதில் நம்மில் எல்லோரும் சேர்ந்து கவலை எடுத்துக்கொண்டு முன்வருவது கஷ்டமாயிருக்கிறது.

ஆனாலும் ராஜீய துறையில் இந்தவருஷம் நம் நாடு எப்பொழுதுமில்லாத முன்னேற்றமடைந்திருக்கிறது. ஆனால் அது நமது அதிகாரவர்க்கத்தினருக்கு பிடிக்கவில்லை. எப்படியாவது அதை பின் [...] பார்க்கிறார்கள். இந்த சமயத்தி[ல்] நாம் உறுதியுடனும் தன்னல மறுப்புடனும் எவ்வித தியாகத்திற்கும் தயாராய் நிற்கவேண்டும். கொஞ்சம் அஜாக்கிரதையாய் இருப்போமேயானால் இதுவரை நாம் பட்டபாடு வீணாய்ப்போய்விடும்.

தற்சமயம் நாம்செய்யவேண்டியவேலையானது மிக சுலபமானதாகவும், மதாபிமானிகளில் சகல மதஸ்தர்களும் ஒப்புக்கொள்ளத்தக்கதாகவும் ராஜீய விஷயத்தில் அபிப்பிராயபேதப்பட்ட சகல கக்ஷிக்காரர்களும், நம் எதிரிகளும் அரசாங்கத்தாரும் யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடியதுமான அவ்வளவு நியாயமானதாகவும் பரிசுத்தமானதாகவுமிருக்கிறது. அதாவது தேசத்தையே அழித்து ஒழுக்கத்தைக் குலைத்து மானத்தைக்கெடுத்து நம் எதிரிகளை பலப்படுத்தியதற்கு மூலாதாரமாயிருக்கிற மதுபானம் என்பதை விலக்குவது ஒன்று, தேசத்தின் சகல வுக்கத்தையும் கெடுத்து செல்வத்தை இழ[ந்து] குன்றி நோய்வாய்ப்பட்டு ஆண்[...] இழந்து அடிமைகளாகியதை மாற்ற, அழிந்து போன கைத்தொழில்களை நிலைநிறுத்தி சுதேசியத்தை கைக்கொள்வது இரண்டு, ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரர் என்[று] ச்சொல்லும் நம் இந்திய மக்களுக்குள்ளாகவே ஒருவருக்கொருவர் தொட்டுக்கொள்வதே பாவம் என்று சொல்வதான கொடுமையை நீக்குவது மூன்று.—ஆக இந்த மூன்று காரியங்களையும் இன்னும் மூன்று மாதத்திற்குள் செய்து முடிக்கவேண்டியிருக்கிறது.

இவற்றில் முதலாவதான மதுபானம் என்பது அவசியம் ஒழிக்கத்தக்கது என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள் [...] முந்தியே சொன்னேன். அதினால் ஏற்படும் கெடுதிகளை நாம் ஒவ்வொருவரும் அறிந்திருக்கிறோம். நம்முடைய மதங்களும் மதுபானத்தை வெறுப்பதுடன் அதை பஞ்சமா பாதகங்களில் ஒன்றாகக் கருதுகின்றன. மதுபானத்தில் சர்க்காருக்கு வருஷத்தில் 13 கோடி ரூபாய் வருமானம் என்பதை சர்க்காரே ஒப்புக்கொள்ளுகிறது. ஆனால் நம்முடைய புத்திப்படிக்கும் அனுபவப்படிக்கும் கணக்கு பார்த்தால் எத்தனையோ கோடி ரூபாய் நஷ்டமாகிறது. சர்க்காருக்கு 13 கோடியானால் கள்ளு [...] மரங்களுக்காக மரக்காரருக்கு கொடுப்பது எத்தனை கோடி, கடைகள் ஏலத்தில் எடுப்பவர்கள் லாபமாய் சம்பாதிப்பது எத்தனை கோடி, கள் இறக்கவும் சுமக்கவும் விற்கவும் உள்ள ஆள்களுக்கு எத்தனை கோடி, சர்க்கார் இலாகா உத்தியோகஸ்தர்[...] பந்திகளுக்கும் இனாமும் லஞ்சமும் கொடுப்பது எத்தனைகோடி, கோர்ட்டுக்கும் சாக்ஷிகளுக்கும் ஓட்டலுக்கும் கொடுப்பது எத்தனைகோடி வக்கீலுக்கு கொடுப்பது எத்தனை கோடி நீதி நிர்வாக அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுப்பது எத்தனைகோடி. குடி போதையினால் விவசாயி தன் [...] ரமமாய்ப்பாராமல் விளைவு முதலியவற்றில் நஷ்டமடைவது எத்தனைகோடி. கூலி[கா]ரர்களும் மற்றுமுள்ளவர்களும் குடி[...] [தேகம்] மெலிந்து பலங்குறைந்து போவதில் வேலை கெடுவது எத்தனைகோடி பெறும். இன்னமும் நம் தேசத்தில் குடியினால் சாகிறவர்களின் உயிரும் அவர்களின் சேவையும் தேசத்திற்கு எத்தனைகோடி பெறும். இதல்லாமல் குடியினால் அழியும் மானம் எத்தனைகோடி பெறும்.

இத்[த]கைய குடி விஷயத்தினால் நஷ்டப்படாத மனிதராவது வஸ்துவாவது நம் நாட்டில் இல்லை என்றே சொல்லவேண்டியிருக்கிறது. இப்பேர்ப்பட்ட கொடிய தன்மையுள்ள இராக்ஷசனை விலக்கி குடிகளை ரக்ஷிக்க உலகத்தில் கடவுளால் கிரமமான அதிகாரம் பெற்றவர்கள் அரசாங்கத்தார்தான். ஆனால் நம் விதிப்பயனால் ஏற்பட்ட ராஜீக முறையிலோ தங்கள் வருமானத்திற்காக இந்த மது வியாபாரம் செய்வது அரசாங்கத்தாரின் கடமையாய்ப்போய்விட்டது. இந்த கொடுந்தன்மையுள்ள மதுவை நம் ச[கோத]ரர் அருந்துவதை தடுத்து அவர்களை நன்மக்களாக்க விரும்பும் மதுவிலக்கு வேலைக்காரர்களை தடுத்து தண்டிக்குமாறு தங்களால்கூடியதை யெல்லாம் செய்ய நம் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு கடமையாய் போய் விட்டது. இதற்காக, அ[நி]யாயமாய் மதுவிலக்கு வேலைக்காரர்கள் மீது பலாத்காரம் அல்லது பயமுறுத்தல் அல்லது பயமுறுத்த தூண்டுதல் என்னும் குற்றம் சாட்டி அவர்கள் வேலை செய்ய ஒட்டாமல் தடுத்தல் அல்லது அவர்களை சிறையில் அடைத்து விடுதல் முதலிய காரியங்கள் ஷை உத்தியோகஸ்தர்களுக்கு இன்றியமையாததாய் போய் விட்டன. இந்த நிலைமையில் மகாஜனங்கள்மதுவிலக்கு விஷயத்தில் செய்யும் ஒவ்வொரு பிரயத்தனத்தையும் பலமான பழியை சுமர்த்தி அழித்துவருகிறார்கள். உதாரணமாக, உங்கள் ஜில்லாவிலும் என்னுடைய ஜில்லாவிலும் மதுபான விஷயமாய் மகா ஜனங்களால் செய்யப்பட்ட பிரசாரமானது பூரா வெற்றியையும் கொடுத்தது என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. [...]ல் இருந்திருந்தால் ஷை வெற்றி அப்படியே நிலைத்திருக்கும் என்பது என்னுடைய துணிபு. ஆனால் அதிகாரிகள் அப்படி இருக்க அவர்களுடைய சந்தர்ப்பங்கள் சரிப்படவில்லை. காரணம் சில்லரை அதிகாரிகள் தங்கள் நடவடிக்கைகளில் மனச்சாக்ஷிப்படி நடக்க இயலாததாலும் தங்கள் அற்பபுத்தியாலும் பேராசையாலும் தாங்கள் செய்யும் கெட்ட காரியங்களை மூடிக்கொள்ளவும் உத்தியோகத்தில் உயரவும், மேலதிகாரிகளையும் சர்க்காரையும் திருப்தி செய்வதற்காக அனேக தந்திரங்களும், திருட்டுத்தனங்களும் அக்கிரமங்களும் செய்து 144-வது செக்ஷனை பிரயோகித்தும் நமது வெற்றியை குலைக்க ஆரம்பித்து விட்டார்கள். அதன் பலனாக அனேக இடங்களில் பேராசை பிடித்த சில ஜனங்கள் மனோ உறுதியை இழந்து விட்டார்கள். சில மணியகாரர்கள் தங்கள் மணியம் உத்தியோகத்தை காப்பாற்றி கொள்ளவும் சில இடங்களில், அதிகாரிகளை திருப்தி செய்து அவர்களின் அக்கிரமான செல்வாக்கைப் பெறவும் இப்படியாக பல விதத்திலும் ஜனங்களை உறுதி இழக்கச் செய்து, நின்று போன கள்ளுவியாபாரத்தை பிழைக்க வைத்து விட்டார்கள். இதுவரை ஈரோடு பவானி தாலூகாவில் 20 பேர் வரையிலும் மதுவிலக்கு விஷயத்தில் பலாத்காரமாய் நடந்து கொண்டதாக தண்டிக்கப்பட்டு ஜெயிலுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றனர். இது மதுவிலக்கு பிரசாரர்களை மிரட்டுவதற்காகவே செய்திருப்பதாய் எனக்கு தோன்றுகிறது. ஆனால் இன்னும் சிறைக்குப்போவதற்கு அனேகர் காத்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் யாரும்பயப்படப் போவதில்லை.

வேறு வழிகள்.

இப்படியெல்லாம்ராஜரீகம் நடந்தபோதிலும் நமக்கு இன்னமும் மதுபானத்தையொழிக்க சந்தர்ப்பம் இல்லாமற் போகவில்லை. தென்னை பனை முதலிய கள் உற்பத்தியாகும் மரங்களை உடைய நம் சகோதரர்களிடம் நம் உண்மையான கடமையை செலுத்துவோமானால் நமக்கு வெ[...]ற்றியிருக்கிறது. மரம் [...] நன்மைக்கு வளர்த்தார்[...] அழிவிற்கு வளர்க்கவில்லை. மரமு[டைய]ர்கள் மரத்தை கள்ளுக்கு கொடுப்ப[து] டர்களுக்கு கன்னக்கோல் செய்து [...] பதற்கு சமானமானதென்றும் இன்ன[...] கடுமையான பொருத்த முள்ள உபம[ான]ங்களை பெரியோர்கள் கூறியிருக்கிறா[ர்கள்]. அன்றியும் மரத்தை கள்ளுக்கு விடுவ[தா]ல் வரக்கூடிய லாபத்திற்கு எந்த வித[த்தி]ம் குறைந்ததல்ல மரங்களை தேங்காய்[க்கு] ய்க்க விடுவது. ஆகையால் மரமுடைய [ச]கோதரர்கள் தங்கள் சகோதரர்களையும் அவ[ர்]கள் குடும்பங்களையும் கெடுக்காமல் இருக்க[வா]வது தங்கள்மரங்களைகள்ளுக்கு விடாமல் நிறுத்தி கொள்வார்களேயானால் மதுபானம் என்பது நின்று விடும். அன்றியும் கள்ளு இறக்குகிற கூட்டத்தாரும், இதற்காக மண்பாண்டம் செய்து கொடுக்கும் கூட்டத்தாரும் ஒன்று கூடி இந்த பஞ்சமா பாதகத்திற்கு ஆதாரமான ஷை காரியங்களுக்கு தாங்கள் உதவி புரிவதில்லை என்று தீர்மானித்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாய்ப் போய் விட்டது. இவ்வளவையும், அதிகாரிகளும் தேச க்ஷேமத்தில் கவலையற்ற சுய நலம் கொண்டவர்களாகிய கள் வியாபாரிகளும்ஜெயித்து கள்வியாபாரம் ஆரம்பித்து விட்டார்களேயானால்அப்பொழுதுதான் நம்முடைய கடமையைசெலுத்த நமக்கு பாக்கியம் வாய்க்கும். அந்தசமயத்தை மனிதனாய்ப்பிறந்த யாவரும் இழந்துவிடக்கூடாது.

மறியல் வேலை.

மகாத்மாவின் கட்டளைப்படி நாம்ஒவ்வொருவரும்கள்ளுக்கடைமுன்னால் நின்று கொண்டு கள் குடிக்க வருகிறவர்களை நல்ல வார்த்தை சொல்லி அவர்களை குடிக்காமல் தடுக்க வேண்டும். இந்த விஷயத்தில் கொஞ்சம் திரேகப்பிரயாசை ஏற்படலாம். அல்லது கடைக்காரரால் ஏவப்பட்ட குடிகாரராலாவது, கடைக்காரர்களாலாவது, [...] பட்டலாம். அதிகாரிகளால் நாம் அக்கிரமமாய் தண்டிக்கப்படலாம். இவற்றை ஒன்றையும் நாம் லக்ஷியம் செய்யக்கூடாது. மகாத்மா அவர்கள் தாமும் அலிசகோதரர்களும் ரத்த ஆற்றின் மேல் நின்று குடிப்போர்களை தடுப்போம் என்று சொன்னார்கள். அப்படியிருக்க நாம் வெறும் தரையிலிருந்து இந்த காரியம் செய்வது கஷ்டமா? இனி இந்த காரியம் செய்வதற்கு ஒவ்வொருவரும் தயாராயிருக்க வேண்டும். ஆண் பிள்ளைகளாகிய நாம் இந்த காரியத்திற்குப்போகும் போது நமது பெண்டுகளையுங்கூட அழைத்து போய் மறியல் வேலையில் நிற்க வேண்டும். இப்படி செய்வதில் 10 ஆண்களால் ஆகும் வேலை 2 பெண்களால் முடிவு பெறும். எவ்வளவுக்கெவ்வளவு நாமும் நமது பெண்டுகளும் தண்டனை அடைந்து ஜெயிலுக்கு போகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு மதுபானம்ஒழிவதும்சுவாதீனம் அடைவதுமநிச்சயம். மதுவிலக்கின் எதிரிகளுக்கும் புத்தி வரும். அல்லாமல் கிராமங்களுக்கு சென்று விஷயத்தைசொல்லி குடியை விலக்கும்படி ஜாதிக்கட்டுப்பாடு செய்யவேண்டும்.இதைவிட தேசமுன்னேற்றத்திற்கு முக்கியமானகாரியம் வேறொன்றிருப்பதாய் எனக்கு தோன்றவில்லை. மது விலக்கு செய்த அனேக ஊர்களில் குற்றம் புரிவோர் குறைவு பட்டிருக்கிறார்கள். தண்டனை அடைவோர் குறைவு பட்டிருக்கிறார்கள். பணம் அதிகமாய் மீந்து பாங்கியில் போட்டிருக்கிறார்கள்.

சுதேசியம்.

சுதேசியத்தில் நமக்கு லக்ஷியமும் அபிமானமும் இல்லாத காரணமே நம்முடைய தேசம் தரித்திர மடைந்ததும் நோய்வாய்ப்பட்டதும் வயிற்று பிழைப்புக்காக விபசாரம் செய்யக்கூடிய கூட்டம் ஏற்பட்டதும் நம்முடைய மானம் அன்னியரால் காப்பாற்றப்பட வேண்டியதானதும். இதை விட ஒரு தேசத்துக்கு இழிவும் அவமானமானதுமான சங்கதியங்கள் வேறொன்றிருப்பதாய் எனக்கு தோன்றவில்லை. நம் தேசத்திற்கு

(மூன்றும் பக்கம் பார்க்கவும்)

அஹிம்சையும்.

—:o:—

எழுதுகிறார்:—

[illegible]ம், அஹிம்சையும் ஒன்றுக்[illegible]ரண்படும் விஷயங்கள். ஒன்று [illegible]ற அழித்து விடக்கூடியது. [illegible]ர்மம் வெற்றி பெறுவதற்கு ப[illegible] காரியங்களே நடைபெறுமலி[illegible]ண்டும். ஒத்துழையாமை இயக்[illegible]மான பிறகு நேர்ந்திருக்கும் சம்[illegible]னைத்திலும், மாப்பிள்ளை மார்களு[illegible] கலகமானது ராஜீய மண்டலத்தைக் [illegible]பி விட்டது. மலபாரில் [illegible]ணுவச் சட்ட அமுல் நடந்து [illegible]கிறது. கவர்ன்மெண்டார் பதி[illegible]குப் பதில் செய்யப்போகும் காரியங்க[illegible] இன்னமும் பாக்கியிலிருக்கின்றன. க[illegible]கக்காரர்களின் வீரத்துக்குத் தகுந்தபடி சி[illegible]ட்சையும் கடுமையாக இருக்கப் போகிறது. அது தான் கவர்ன்மெண்டுகள் அனுஷ்டிக்கும் முறை, மாப்பிள்ளைமார்கள் பலாத்காரத்திலிறங்கியிராவிடில் அவர்களுடைய உயிர்கள் எத்தனை போனாலும் நான் கவலைப்படமாட்டேன். அவ்விதம் அவர்கள் செய்திருந்தால், சுயராஜ்யம் கிடைக்கும் காலம் கிட்டியிருக்கும். சுயராஜ்ய சித்தி பெறுவதற்காக நாம் தாராளமாக உயிர்களைக் கொடுக்கலாம். மாப்பிள்ளைமார்களுக்கு கிலாபத் விஷயத்திலும் பரிகாரம் கிடைத்திருக்கும். உண்மையான தியாகத்தையே பகவான் விரும்புகிறார். நமது ரத்தத்தில் துவேஷப் பூச்சிகளிருக்கலாகாது. தாராளமாகத் தியாகம் செய்வோர் அதற்கு சன்மானம் வேண்டுமென்று கேட்பது பொருந்த முடையதன்று. மாப்பிள்ளைமார்கள் சன்மானம் வேண்டுமென்று கேட்டு விட்டார்கள், அதனால் அவர்களுடைய தியாகத்தின் மகிமை குறைந்துவிட்டது. மாப்பிள்ளைமார்களுக்குத் தகுந்த சிட்சை கிடைத்ததென்று இப்பொழுது சொல்லப்படலாம். மாப்பிள்ளைமார்கள் மட்டில் உயிர் துறந்திருந்தால் ராணுவச் சட்டமே ஏற்பட்டிராது. அப்பொழுதும் ராணுவச் சட்டம் ஏற்பட்டிருந்தால் பல விதங்களில் அது அனுகூலமேயாகும். இந்த ஆட்சி முறையையே அது ஒழித்திருக்கும்.

பஞ்சமோ, கூலிகளின் வெளியேற்றமோ, மாப்பிள்ளைமார் கலவரமோ எதற்கும் ஒத்துழையாமை இயக்கத்தின் மீது பழுவைப் போடுவது சகஜமாகிவிட்டது. ஒத்துழையாமை இயக்கம் எங்கும் வியாபித்திருப்பதற்கு அது தகுந்த அத்தாக்ஷியாகும். ஆனால் ஒத்துழையாமை இயக்கமே மலையாளக் குழப்பத்திற்குக் காரணமென்று சென்னை கவர்ன்மெண்டார் எவ்வித ருஜுவும் காட்டவில்லை. நமது கடமை இன்னதென தெளிவாக ஏற்பட்டுவிட்டது. ஒத்துழையாதார் இதில் கொஞ்சமும் சம்பந்தப்படாமல் கையைக் கழுவி விட வேண்டும். மாப்பிள்ளைமார்களை ஆதரிப்பதாக மனதிலும் ஸ்மரிக்கக் கூடாது. அவர்களுடைய பலாத்காரமான செய்கைகளை ஆதரிப்பது கண்ணியக் குறைவான தென்பதை நாம் அறியவேண்டும். அவர்களுக்கு ஆதரவளிப்பதற்காக எவ்வித ஆதாரத்தையும் கேட்கக் கூடாது. நாம் நடந்து கொள்ள வேண்டிய முறையை திட்டப்படுத்திக்கொண்டு விட்டோம். அதிலிருந்து சிறிதும் பிறழாமல் நாம் நடந்துவர வேண்டும். நமக்கு அதிக கோபத்தை உண்டு பண்ணக் கூடிய காரியங்களைச் செய்த போதிலும் அதிக்கிரமத்தி லிறங்குவதில்லையென்று நாம் சபதம் செய்து கொண்டிருக்கிறோம். முடிவில் கடுமையான சோதனை ஏற்படலாமென்றே நாம் எதிர்பார்த்திருக்கிறோம். நெறிகெட்ட மாப்பிள்ளை மார்கள் இஸ்லாத்திற்கும் சுயராஜ்ய சித்திக்கும் பெரிய இடையூறு செய்து விட்டார்கள்.

நாம் உண்மையாக நடந்து கொண்டிருந்தால், நாம் சிரமப்பட்டும் முரட்டுத் தனமானவர்களை சாந்தப் படுத்த முடியவில்லையென்று சொல்லலாம். அவ்விதம் சொல்லவும் தான் வேண்டும்; நாமாக அஹிம்சா தர்மத்தைக் கைக் கொண்டு ஒத்துழையாமையை அனுஷ்டிப்பதா அல்லது கவர்ன்மெண்டாருடைய ஆட்சியைத் தாங்கி நிற்பதா வென்பது ஜனங்களே முடிவு செய்து கொள்ள வேண்டிய விஷயம். பலத்தை சரியான வழியில் உபயோகிக்கத் தேர்ச்சி பெற்ற கவர்ன்மெண்டார் பலாத்காரமான செய்கைகளை அடக்கிவிடத் தங்களுக்கிருந்து வரும் சக்தியைக் காட்டி வருகிறார்கள். ஜனங்களிடத்தில் நமக்கு அதிகச் செல்வாக்கிருப்பதை நாம் காட்டிக் கொள்ளாவிடில் வேறுபதில் நமக்குக்கிடையாது. நாம் கவர்ன்மெண்டின் மீது பலாத்காரத்தை உபயோகிப்பது ஒரு குழந்தை ஒரு துரும்பைக் கொண்டு வெள்ளத்தைத் தடுக்க முயற்சி செய்வதற் கொப்பாகுமென்பதை நாமும் உணர்ந்து ஜனங்களுக்கும் நிரூபணம் செய்ய வேண்டும்.

அஹிம்சா தர்மத்தின் மூலமாகவே நாம் உடனே சுய ராஜ்ய சித்திபெற முடியுமென்பதை நாமனைவரும் இன்னமும் உணரவில்லையென்பது எனக்குத் தெரியும். பலாத்காரமான காரியங்களினால் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை மறைந்துவிடுமென்பதையும் நாம் இன்னமும் உணரவில்லை. நமக்குள் பலாத்கார மேற்பட்டு விடுமோ வென்கிற பயமில்லாவிடில் நாம் ஒருவரை சம்சயிக்க இடமில்லை. நமக்குள் பூரண ஒற்றுமை இல்லாவிடில் சுயராஜ்யம் பெறுவது சாத்தியமன்று.

பலாத்கார பயத்தைத் தவிர சுய ராஜ்ய சித்திக்கு வேறென்ன இடையூறு இருக்கிறது. அந்த பயத்தினாலல்லவா எல்லாப்படிகளையும் உடனே அனுஷ்டியாமலிருக்கிறோம். பலாத்கார மேற்படாதென்கிற நம்பிக்கை நமக்குப் பூரணமாக இருந்தால் நம்முடன் ஒத்துழைக்க வேண்டும் அல்லது போய் விடவேண்டும் என்று கவர்ன்மெண்டுக்கு இறுதிக் கடிதமனுப்பக் கூடாதா? நாம் பலாத்கார மேற்படாமல் தடுக்க முடியாதென்கிற பயத்தினாலன்றோ மிதவாதிகள் ஒதுங்கியிருக்கிறார்கள்? மாப்பிள்ளைமார் கலவரத்திலிருந்து அவர்களுடைய பயங்கொள்ளித்தனத்துக்கு ஆதாரமேற்படும்.

நாம் இனிச்செய்ய வேண்டிய தென்ன? நாம் மனச்சோர்வு அடையக்கூடாது. நம்முடைய சக்தியில் அதிகமாக நம்பிக்கை வைத்து அதிக உற்சாகத்துடன் வேலைசெய்யவேண்டும். கிலாபத் அநீதிகளுக்குப் பரிகாரம் தேடவும், சுயராஜ்ய சித்திபெறவும் எழுத்தறிவில்லாத சாமான்ய ஜனங்களையும் அஹிம்சா தர்மத்தின் மஹிமையில் ஈடுபடுத்தவேண்டும்.

நமது நாட்டினரனைவரிலும் மாப்பிள்ளைமார்கள் தைரிய புருஷர்கள்; தெய்வ பயமும் அவர்களுக்குண்டு. அவர்களுடைய வீர்யத்தை நல்லவழியில் திருப்பவேண்டும். அவர்களுடைய மத மஹிமையைக் காப்பாற்ற அஹிம்சா தர்மமே சிறந்த தென்பதை அவர்கள் கண்டு கொண்டு விடுவார்களானால், அதினின்றும் அவர்கள் கொஞ்சமும் தவறமாட்டார்கள். அவர்கள் மகாவீரர்களென்றும், சற்கதி யடைவதே அவர்களுக்குத் தெரியாதென்றும் கவர்ன்மெண்டு பிரசுரத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அத்தகைய வீர புருஷர்களை ஒழுங்காக நடத்த வேண்டும். கவர்ன்மெண்டார் சிலவருஷங்களுக்குமுன் அவர்கள் மீது ஒரு சட்டத்தை ஏற்படுத்தினார்கள். தற்போதைய கலவரத்திற்கும் அவர்கள் [illegible]வாக இயந்திரத்தை ஆட விட்டுவிட்டார்கள். மாப்பிள்ளைமார்கள் சந்தோஷத்துடன் உயிரைக் கொடுப்பார்கள். அத்துணை வீர புருஷர்களை அஹிம்சா தர்மத்தில் ஈடுபடுத்த முடியுமா வென்று நான் ஆச்சரியப்படுகிறேன். மனுஷ்ய முயற்சியினால் அதைச் செய்ய சாத்தியமில்லாமலிருக்க[illegible]. ஆனால் கடவுள் எதையும் செய்துமுடிக்க வல்லவர். இந்த வருஷக் கடைசிக்குள் சுயராஜ்யம் கிடைத்தால் அது அதிசயமென்றே பலர் நினைக்கிறார்கள். அதற்கு முன்னதாக எல்லோரையும் அஹிம்சா தர்மத்தில் ஈடுபடுத்த வேண்டும். சுயராஜ்யம் பெறுவதற்கு அது ஒரு முக்கியமான நிப[illegible]னையாகும்.

[யங் இந்தியா.]

ஸ்ரீ. சென்குப்தா

[illegible]ங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசி ஸ்ரீ சென்குப்தா கைது செய்யப்பட்டிருக்கிறார். அஸ்ஸாம் வங்காள ரயிலுக்கருகில் நடந்த குழப்ப சம்பந்தமாக இவர் கைது செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

கடுங்காவல் தண்டனை

[illegible] பிரசுரிக்கப்பட்டு வரும் "லோகசாக்ஷி" பத்திரிகையின் ஆசிரியரும் பிரசுரகர்த்தாவும் ராஜத்துரோகக் குற்றத்திற்காக முறையே ஒரு வருஷத்திற்கும் ஒன்பது மாதத்திற்கும் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பெற்றனர்.

வெளி வந்துவிட்டது!

மகாத்மா காந்தியால் இயற்றப்பட்ட நூல்கள்

1. ஆரோக்கிய வழி

இந்நூலைப் படித்து அறிந்து அதில் சொல்லியிருக்கிறபடி நடப்போர் நோயற்ற வாழ்வினராக இருப்பர் என்பது நிச்சயம். சென்ற 20 வருஷகாலமாக தேகாரோக்கியத்தைப்பற்றி நாம் படித்துள்ள பல நூல்களிலிருந்தும், தமது விஸ்தாரமான அனுபோகத்திலிருந்தும் அறிந்துள்ள உண்மைகளை [illegible] கஷ்டப்படும் மனுஷ்ய ஜாதியிடத்தில் [illegible]தாபம் கொண்டு சொல்லியிருக்கிறார். எல்லாம் சொல்லுவதிலும், சொல்லுகிற மாதிரி முக்கியமானது. அந்த மாதிரியை மகாத்மா நன்கறிந்தவர். அவருடைய நூலை ஒரு முறை மேலெழுந்தவாரியாகப் படித்தாலும், உடனே அவருடைய கொள்கைகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர ஆரம்பித்து விடுவார்கள். சுதேசமித்திரன் சொல்லியிருப்பது போல் இந்நூல் அதை எழுதியவரைப்போல் அதிசயமாகவுள்ளது.

விலை அணா 12.

2. தர்ம நீதி.

இந்த நூலில் ஸன்மார்க்க வாழ்விற்கு அடிப்படையாகவுள்ள தர்மங்களை மகாத்மா காந்தி தெளிவாகவும் இலகுவாகவும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

3. இந்திய சுயராஜ்யம் அல்லது இந்தியன் ஹோம்ரூல் விலை அணா 12

இந்தியாவைப்பற்றிய உண்மை.

மிஸ்டர் ஹைண்ட்மெனால் இயற்றப்பெற்றது.

விலை அணா 6.

எம். நாதா அண்டு கம்பெனி,
மண்ணடி, மதராஸ்.

பீமராஜ கல்பம்.

இது ஓர் ஆச்சரியகரமான மகா சக்திவாய்ந்த தாது புஷ்டி மருந்து.

இதி பாரத வீரர்களில் அதி வீரபராக்கிரமசாலியாகிய பீமசேன மகாராஜாவால் [illegible]பயோகிக்கப்பட்டது. மகாத்மா ஸ்ரீ [illegible]முத்து சுவாமிகளால் அநுக்கிரகிக்கப்பட்ட இந்த கல்பம கிழவரையும் குமரனாக்கும். உண்டவுடனே குணங்காணக்கூடிய சிறந்த ஔஷதம். இதைப்புசித்தால் பீமசேனருக்குண்டாயிருந்த பலம், தைரியம், சுகம், ஆரோக்கியம், [illegible], புஜபல பராக்கிரமம் முதலியன நிச்சயமாய் உண்டாகும். சுமார் 360 வியாதிகளை [illegible]. எவ்விதமான [illegible]த்திற்கு உத்திரவாதமுள்ள [illegible] சேஷ்டையாலோ மற்ற [illegible]த்தாலோ உண்டான எல்லாவித தாது நஷ்ட ரோகங்களைப் போக்கக்கூடியது. சொப்பன ஸ்கலிதம், [illegible] தேக பலத்தைத் தந்து [illegible] சக்தியை உண்டாக்கும். மனோ முயற்சி செய்யும் உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள், மா[illegible]கள், புத்திரபாக்கியம், அழகு, ஆயுள், பலம், ஆரோக்கியம், சுகம், தைரியம போகம வேண்டுபவர்கட்கு அத்யாவசியமானது. பத்தியமில்லாது சாப்பிடக்கூடியது. அதிக விபரம் வேண்டுவோர் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். சிறந்த மருந்து குறைந்த விலை.

விலை விபரம்

1 [illegible]மராஜ கல்பம் மாத்திரை 32-க்கு ரூ. ...	1	0	0
2 காமராஜாமிர்தம் மாத்திரை 16-க்கு ரூ. ...	1	4	0
3 வசந்தராஜ காமகேசரி லேக்கியம் சேர் 1-க்கு ரூ.	2	8	0

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

[illegible] ஆ. ராஜா,
ஆயுர்வேத ஔஷதசாலை,
[illegible]நாராயணபாளையம், கடலூர். O. T.

மகாத்மாகாந்தி
எழுதிய
ஆரோக்யவழி.

இந்நூலைப் படித்து அறிந்து அதில் சொல்லியிருக்கிறபடி நடப்போர் நோயற்ற வாழ்வினராக இருப்பர் என்பது நிச்சயம். சென்ற 20-வருஷ காலமாக தேகாரோக்கியத்தைப்பற்றி தாம் படித்துள்ள பல நூல்களிலிருந்தும், தமது விஸ்தாரமான அனுபோகத்திலிருந்தும் அறிந்துள்ள உண்மைகளை இதில் சொல்லியிருக்கிறார்.

விலை அணா 12 (தபாற்கூலி வேறு)

தர்ம நீதி அணா—6

இந்தியாவைப்பற்றிய உண்மை

மிஸ்டர் ஹைண்மெனால் இயற்றப்பட்டவை. அணா—6.

புஸ்தகக் காட்லாக் வேண்டுவோர் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

வி. நாராயணன் அண்டு கம்பெனி,
4. கொண்டி செட்டி தெரு, சென்னை.

ஜெண்டில்மேன் அண்டு லேடீஸ் எக்ஸ்பாண்டிங் பிராஸ்லேட்.

ரிஸ்ட் வாட்சு.

இந்த ரிஸ்ட் வாட்சு மிக உயர்ந்த சாமான்களால் தயார்செய்து அமெரிக்காவிலிருந்து அனுப்பபட்டன. இந்த வாட்சு அநேக வருஷங்கள் ரிபேர் இல்லாமல் சரியான காலத்தை காட்டக்கூடியது. இந்த வாட்சு ஸ்திரி, புருஷர்கள், பிள்ளைகள் யாவரும் கையில் போட்டுக்கொள்ளுமாறு பிராஸ்லேட் என்னும் செயின் ஒவ்வொரு மணிக்கட்டுக்கும் பிடிக்குமாறு நீளவும், குறுக்கவும் ஓர் வித சமத்காரமான வில் இசையை அமைத்திருக்கிறது. பார்வைக்கு வெகு அழகான தோன்று.

ரிஸ்ட்வாட்சு பிராஸ்லேட் சங்கலியுடன்
விலை ரூபா 6-4-0

டை. பொன்கில்ட் ரிஸ்ட்வாட்சு
விலை ரூபா 8-0-0

ஜேபியில் போட்டுக்கொள்ளும் "பெஸ்ட்லீவர்கெடியாரம்" 1க்கு விலை ரூ 4-12-0

விலாசம்:—
[illegible]ராஜ புஸ்தக் சாலை,
அருணாசல முதலி வீதி G. T. மதராஸ்.

"ஸ்ரீ ஹனுமான் கணித ஆரூடம்"

சகலகனவான்களுக்கும் அறிவிப்பது யாதெனில், ஒவ்வொருவரும், அவர் அவர்களுடைய ஜனன வருஷம், மாதம், தேதி, சூரிய உதயாதி நாழிகை இவைகளை எழுதி அத்துடன் அவரவர்கள் கேட்கவேண்டிய ஆரூட கேள்விகளை வரிசையாக எழுதி கவரில் போட்டு ஒட்டி அதற்கு ஸீல் வைத்து அடியில் கண்டவிலாஸத்துக்கு அனுப்பினால் உங்களுடைய ஸீல் கவரை உடைத்துப் பாராமலே உள்ளிருக்கும் உங்கள் ஆரூட கேள்விகளுக்கு தக்க பதில் எழுதி நமது பதிலும் உங்கள ஸீல்கவரும் உங்களுக்கு திருப்பியனுப்புவோம். களவு, கவர்ன்மெண்டுக்கு விரோதமான கேள்வி இவைகளுக்கு பதில் கிடைக்காது. ஜனன காலம் தெரியாதவர்கள் நக்ஷத்திரமாவது, ஆரூடம் எழுதும், மணியத்தையாவது எழுதியனுப்பவேண்டியது. நாம் எழுதும் பதில் சரியில்லாவிடில் தமது ரூபாயை வாபசு செய்யப்படும்.

சார்ஜ்விவரம்.	ரூ	அ	பை
1 முதல் 6-ஆரூடக் கேள்விகளுக்கு	1	0	0
6க்குமேல் தனித்தனி	0	4	0
1 வருஷத்துக்கு நடக்கப்போகும் மாதவாரி பலனுக்கு	2	0	0
ஆயுள்வரை பலனுக்கு	100	0	0

புரோப்ரைட்டர்
அனுமான் சோதிட ஆபீஸ்
வளவனூர் S. I. R. தென் ஆற்காடு ஜில்லா

"தமிழ் நாடு" அறிக்கை.

காரைக்குடி காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியாகிய ஸ்ரீ பசலா கிருஷ்ணய்யர் "தமிழ் நாடு" பத்திரிகையின் செட்டி நாட்டு ஏஜெண்டாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மானேஜர்,
"தமிழ் நாடு" ஆபீஸ், சேலம்

ஜனோபகாரி.

கல்வி, விவசாயம், வியாபாரம், கைத்தொழில், ஆகிய இவைகளைக் குறித்த பல விஷயங்கள் அடங்கிய ஓர் தமிழ் மாதந்தரத் தமிழ் பத்திரிகை.

தபாற் கூலிஉள்பட வருஷசந்தா ரூ 3
மாதிரி காப்பி இனம்.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
ஜார்ஜ்டவுன் மதராஸ்.

ஒட்டு மாங்கன்[illegible].

அனேக கண்காட்சிகளிலும், ராஜாக்களாலும், ஜமீன்தாரர்களாலும், அனேக கனவான்களாலும் 34 வருஷங்களாய் தங்கம், வெள்ளி, மெடல்களும், நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற சேலம் பெயர்பெற்ற 3-வருஷத்திய ஒட்டுமாங்கன்[illegible] பல ஜாதி ஒட்டு பழ[illegible] முதலிய அலங்கார[illegible] நாட்டு காய்கறி முதலிய [illegible] தல் தரமானதாகக் [illegible] அணா ஸ்டாம்[illegible] அனுப்பி[illegible] ட்லாக் இனம்.

ச. கோ. இ. காதர்[illegible]
மாங்கன்று விய[illegible]

இனம்! கியாலண்டர் இனம்!

மஹாராஜா சோப்

5 நிமிஷத்தில் சுத்தமாய் தேகத்திலுள்ள அனுவசியமான ரோம[illegible]குகின்றது. எரிச்சலாவது தோலுக்குக் கெடுதலாவது உண்டாகா[illegible] வொரு கடையிலும் விற்கப்படுகின்றது. அசல் மஹாராஜா ரிஜிஸ்[illegible] பர் 37 கேளுங்கள்.

ஒரு பெட்டி விலை ரூ 1-0-0 வி. பி. பாகிங் சிலவுவேறு.

சோல் ஏஜெண்டு:— ஷியாம் கம்பெனி
6 பக்தர் தெருவு மதுரை.

சேலம் மாங்கன்றுகள்.

சேலம் பெயர்பெற்ற 3 வருஷத்திய ஒட்டுமாங்கன்றுகளும், பலஜா[illegible] ஒட்டு பழச்செடிகளும், ரோஸ், குரோடன்ஸ், முதலிய அலங்காரச் செடிகளும், இங்கிலீஷ், நாட்டு, காய்கறி விதைகளும், நூதனமான சீமை புஷ்ப விதைகளும் எப்போதும் முதல்தரமானதாக கிடைக்கும்.

ஒட்டுமாஞ்செடி பலதினுசுகள் வரை செடி 1-க்கு 0—10—0
ஒட்டு கொய்யா, மாதுளை, ஆரஞ்சி, எலுமிச்சை முதலிய
பழச்செடிகள் ஒவ்வொன்று 8 அணா முதல் 10 அணா வரை.
சீமை, நாட்டு, காய்கறி, புஷ்பவிதைகள், பாக்கெட் 1-க்கு அணா 2 மு[illegible]

முழு விபர கேட்லாக் இனம்.

மு. சுல்தான் அஹமது சாஹபு,
மாங்கன் வியாபாரி, சே[illegible]

மின்சார ரசம்.

சென்ற ஒரு வருஷத்திற்கு அதிகமாக சேலம், ஆர். கிருஷ்ண அண்ட் கோ., என்ற விலாசத்தார் இம்மருந்தை விற்று வந்தார்கள். 1921-ஆம் பிப்ரவரிமீ 7-உ முதல் இம்மருந்தை ஷை கம்பெனியில் விற்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. இனி[illegible]ல் "மின்சார ரசம் கம்பெனி" சேலம், என்ற விலாசத்தாரி[illegible]தான் மின்சார ரசம் விற்கப்படும். ஆகையால் இனி ஆர். கிருஷ்ண அண்ட் கம்பெனியார் ஏதாவது மருந்து விற்ருல் அது டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்களின் மருந்து அல்ல.

குறிப்பு:—இந்த ஆர். கிருஷ்ண அண்ட் கம்பெனியார் "மின்சார ரசத்தை" விற்பனை செய்துவந்த காலத்தில் "மின்சாரம்" என்னும் தந்தி விலாசத்தை வகித்து வந்தார்கள். [illegible]பவும், மேற்படி கம்பெனியாருக்கும் இந்த மின்சார ரசத்தி[illegible]ம் யாதொரு சம்பந்தமில்லையாயினும் அவர்கள் இன்னும் அ[illegible] தந்தி விலாசத்தை வகித்து வருகிறார்கள். ஆகவே அவர்கள் [illegible]கித்து வரும் "மின்சாரம்" என்னும் தந்தி விலாசத்தைக் க[illegible] அந்த கம்பெனியாருக்கும் "மின்சார ரசத்திற்கும்" ஏதோ ச[illegible]ந்தமுள்ளதாக எண்ணி ஏமாந்துவிடாதீர்கள். மின்சார ரசம் கம்பெனியின் தந்தி விலாசம் "ரசம் கோ" என்று ரிஜிஸ்டராயிருக்கிறது.

முக்கிய கவனிப்பு:—இந்த தேவாமிர்தம் போன்ற "மின்சார ரசத்தின்" அபூர்வ சக்தியைக் கண்டு அநேகர் சில போலி ரசங்களைத் தயாரித்து ஏதோ "ரசம்" என்னும் பல பெயர்களிட்டு விற்கப் பிரயத்தனம் செய்து வருகிறார்களாகையால் அதை டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்களின் "மின்சார ரசம்" என்று ஏமாந்து விடாதிருக்குமாறு எச்சரிக்கிறோம். டாக்டர் நா[illegible]யுடு அவர்களால் தயாரிக்கப்பட்டு வரும் அவுஷதத்தின் ஒவ்[illegible]ரு பாட்டிலின் பேரிலும் "மின்சார ரசம்" என்று [illegible] செய்யப்பட்ட டிரேட்மார்க் இருக்கிறது. இதை தயவு [illegible] கவனியுங்கள்.

மின்சார ரசம் புட்டி விலை ரூபா 2, தபால் சார்ஜ் அணா 5.

மானேஜர், மின்சார ரசம் கம்பெனி.
சே[illegible].

இனம் | இனம்

வாலிபம் முதல் முதுமை வரை ஸ்திரீ புருஷர்கள் வியாதியற்றவர்களாயும் பலசாலிகளாயுமிருந்து ஆரோக்கியமான சந்ததியைப் பெற்று சுகமே வாழ்க இன்றியமையாத விதிகளைக் கற்றுணரவேண்டும்.

"வைத்திய வித்யா"
என்னும் சிறந்த நூலை வாசித்துணர்ந்து அதிற் சொன்னபடி நடப்பின் மேற்கூறியவை அமையும்.

ராஜவைத்திய
நாராயணஜீ, கேசவஜீ,
27, சைனா பஜார்,
மதராஸ்.

இனம் | இனம்

"தமிழ்நாடு" அச்சுக்கூடம்.

—:o:—

தமிழ் நாடு அச்சுக்கூடத்தில் ஜாப் வேலைகள் செய்து கொடுக்கப்படும். ஆனால் பிரிட்டிஷ் கச்சேரிகளுக்கு சம்பந்தப்பட்ட வேலைகள் செய்யப்படமாட்டா.

மானேஜர்,
"தமிழ் நாடு" பிரஸ், சேலம்.

தீபாவளிபண்டிகை.

கேட்டிச்சாயம்

சரசமானவிலை! நயமானபுடவைகள்!!

9 கஜம் சிகப்பு 1 புள்ளி கரை கருப்பு சேலை 1 ரூ. 7-6-0
" சவுக்கடி 7புள்ளி சேலை 1 ரூ. 7-14-0
" முந்தியில் ¼ இஞ்சி ஜரிகை வைத்த 1 புள்ளி சேலை 1 ரூ. 7-12-0
" ஷை சவுக்கடி 7 புள்ளி சேலை 1 ரூ. 8-4-0
[illegible]
20 x 20 [illegible] 9 கஜம் சிகப்பு 1 புள்ளி கரை கருப்பு சேலை 1 ரூ. 11-8-0
" சவுக்கடி 7 புள்ளி சேலை 1 ரூ. 12-4-0
கருப்புக்கு 0-10-0
8½ கஜம் காபி கலர் புடவை 1 ரூ. 6-12-0

Colour Guaranteed'

200கௌ நூல் 2¾ முழம் அகலம் 5 முழம் நீளம் அங்கவஸ்திரம் 1க்கு ரூ. 3-8-0
ஷை இருகரையிலும், முந்தியில் ¼ இஞ்சி ஜரிகைவைத்த துப்பட்டா 1 ரூ. 5-0-0

The Madura Oriental Trading Co.
Madura (S. India)

இது வரையிலும்! இதுபோன்ற புஸ்தகம்! வெளிவரவில்லை!!!

கலியுக அவதாரமூர்த்தி எனும்,

ஜீவிய சரித்திரம், உபந்யாசங்கள், உபதேசமொழிகள், முதலியவை அடங்கியுள்ளது; 260 பக்கம் கொண்டது.

ஸ்ரீமான் கிருஷ்ணசாமிசர்மா எழுதியது விலை ரூபா 1-8-0 (தபாற் கூலி பிரத்தியேகம்.).

அர்க்கா பிரசுரசாலை,
13, கோண்டலய்யர் வீதி, மதராஸ்.

சினிமட்டோகிராப் மெஷின் ரூ 18-தான்.

பெரிய பயாஸ்கோப் கம்பெனிகளில் காட்டப்படுவது போல், இருட்டு அறையில் விளக்கின் உதவியால் வெள்ளை திரையில் ஆட்டங்களைப் பார்க்கலாம். உருவங்கள் [illegible]தாக யிருப்பினும் ஆட்டங்கள் நன்றாகயிருக்கும். பெரிய பயாஸ்கோப்மெஷினுக்கு உபயோகப்படுகிற பிலிம் படங்க[illegible] எங்கள் மெஷின்களுக்கும் போடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மெஷினுடனும் 1 விளக்கு, 3 மாஜிக் படங்கள் 6 பிலிம் சுருள்கள் அனுப்பப்படும். விலை ரூ 18 தான். ஒரு ரூபாய்க்கு 10 அடி நீளம் வீதம் 1ஆயிரம் அடி வரையில் பிலிம் (Films) எங்களிடம் கிடைக்கும். ஒருஅணா ஸ்டாம்பு அனுப்பினால் மாதிரிக்காக பிலிம் துண்டு அனுப்பப்படும்.

BELSON & Co.,
Jacob Circle, BOMBAY.

[illegible]

'பல கண்காட்சிகளில் [illegible]

"ஷிரியதாது [illegible] ஆனந்தலே[illegible]"

ஒரு மஹான் அவர்களால் [illegible]த்த பூனனி ஷாஸ்த்திர மு[illegible]ரிக்கப்பட்ட தேவாமிர்[illegible]க உஷ்ணகாங்கையிலு[illegible] லஹீனம், ஓர் வித ச[illegible]ழ்க்கையில் பிரியமில்லா[illegible]கும் குணங்கள், சரீரத்தில் பல [illegible] ஓடித்திரியும் பற்பல [illegible] கைக்காலசதி, இடுப்புவலி, [illegible] சிமர்தம், மலச்சிக்கல், இ[illegible]லாம், முதல்தரமான, மருந்[illegible]லுவதுடன் 5 வருஷத்து [illegible]டையாயிருந்தாலும், 40 நாள் [illegible] வந்தீர்களானால் பூரணசவுக்கிய[illegible]கள். என்று நாம் உறுதியாய் [illegible] பத்தியமில்லை. உபயோகப்படுத்[illegible]ம், மருந்துடன் அனுப்பப்படும்.

40 நாள் 12 பலம் டின்1க்கு விலை ரூ 7-0-0
20 நாள் 6 பலம் டின்1க்கு விலை ரூ 3-8-0
10 நாள் 4 பலம் டின்1க்கு விலை ரூ 2-4-0

(வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.)

விலாசம்:—

மானேஜர், வா. செய்கப்துல் காதிர்
நிஜாம், மெடிக்கல்ஹால், கூடலூர் O T
தென்னார்காடு ஜில்லா.

லோகமான்ய பாலகங்காதர திலகர் பெருமானின் அரிய பெரிய

'ஸ்வராஜ்ய'

உபந்யாசங்கள். ஸ்வராஜ்ய விஷயம் அநேகம் அடங்கியுள்ளன முதல்பாகம் 0-6-0

ஹிந்தி தமிழ் பாலபாடம்.

தமிழர் சுலபமே கற்றுக்கொள்ளலாம்
விலை 0—4—0

சங்கர நிலயம்,
2/47, தம்பு செட்டித்தெரு சென்னை

மாதம் இரண்டே ரூபாய் நல்ல பலன்.

நூல் வியாபாரிகளுக்கு மிகவும் ஜீவாதாரமாயுள்ள எங்கள் தினசரி நூல் மார்க்கட் ரிப்போர்ட்டுக்கு மூன்று மாசத்துக்கு சந்தா ரூ 6-0-0 தான். உடனே எழுதுங்கள். சந்தா ரூபாய் முன் அனுப்பவேண்டும். மாதிரி ரிப்போர்ட் இனம்.

மதுரை எக்ஸ்போர்ட் & இம்போர்ட் கம்பெனி,
தெற்கு வீதி மதுரை

7-ம் வருட ஆரம்பம்.

"ஆனந்த போதினி" என்னும் (ஆடி-மீ) பிறக்கப்போகிறது. தமிழ் நாட்டில் தலைமைப்பெற்று விளங்குவதும் அதிக சந்தாதாரரையுடையதும் இதுவே. வருஷ சந்தா ரூபாய் 1.

வெளிநாடுகளுக்கு ரூ. 1—4—0.
மாதிரி சஞ்சிகை இனம்.

"ஆனந்தபோதினி" ஆபீஸ், மதராஸ்.

"வைசிய மித்திரன்"

—:o:—

இது காரைக்குடியினின்றும் வாரந்தோறும் அருமையான விஷயங்களுடன் ராயல்சைஸில் வெளிவரும் ஒரு வாராந்தத் தமிழ்ப் பத்திரிகையாகும். இது வியாபார விருத்திக்குரிய விஷயங்கள், கைத்தொழிற் குறிப்பு, விவசாய நுட்பம், விநோதக் குறிப்பு, அன்னிய வர்த்தமானம், பொது வர்த்தமானம், இராஜாங்க சமாச்சாரம், ஆகிய இவ்விஷயங்களுடன் வெளிவருகிறது.

இந்தியாவுக்கு வருட சந்தா ரூபாய் 5-0-0 ரூபாய் ஐந்தே. வெளி நாடுகளுக்கு ரூபாய் 6-0-0.

மானேஜர்,
வைசிய மித்திரன், காரைக்கு[illegible]

Printed & Published by D. S. G[illegible], at the "TAMIL NADU" Press, Salem.